IndusInd Bank

இண்டஸ்இண்ட் பேங்க் டெபிட் கார்டு பயன்பாட்டிற்கான விதிகள்

விதிகள் மற்றும் நிபந்தனைகள்

முக்கியமானவை: இண்டஸ்இண்ட் பேங்க் ('வங்கி') டெபிட் கார்ட் -ஐ பயன்படுத்தும் முன்னர் டெபிட் கார்ட் விதிகள் மற்றும் நிபந்தனைகளை அவசியம் கவனமாகப் படித்து தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள். டெபிட் கார்ட்-ஐ பயன்படுத்துவதன் மூலமாக கீழே பட்டியலிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை எவ்வித நிபந்தனையுமில்லாமல் நீங்கள் ஏற்றுக் கொள்வதுடன் அதற்குக் கட்டுப்பட்டிருப்பீர்கள், கூடுதலாக, பொருந்தும் இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) ஒழுங்குமுறை விதிகள், ஆர்பிஐ -யின் செலவாணிக் கட்டுப்பட்டு ஒழுங்குமுறை விதிகள், வெளிநாட்டு செலாவணி மேலாண்மைச் சட்டம் 1999 ('எஃப்இஎம்ஏ'), இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டிருக்கும் அனைத்து விதிகள் மற்றும் விதிமுறைகள், அவை அவ்வப்போது திருத்தப்பட்டிருப்பது போல் / மாற்றப்பட்டிருப்பது போல் /பொருந்துவது போல் உள்ளவை மற்றும் அவ்வப்போது இயற்றப்படும் இதர பிற சட்ட திட்டங்களையும் ஏற்று அவைகளுக்குக் கட்டுப்பட்டிருப்பீர்கள். வங்கியுடன் நீங்கள் பராமரித்துக் கொண்டிருக்கும் உங்கள் சேமிப்புக் கணக்கு / நடப்பு கணக்குகளின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அல்லது வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட வேறு ஏதேனும் வரையறைகளுக்கும் நீங்கள் தொடர்ந்து கட்டுப்பட்டிருப்பீர்கள்.

வரையறைகள்:

''கார்டு'' அல்லது ''டெபிட் கார்டு'' என்பது வங்கியானது ஒரு கார்டுதாரருக்கு அவரது சம்மதத்தின் அடிப்படையில் வழங்கும் வங்கியின் மாஸ்டர் கார்டு/விசா/ருபே டெபிட் கார்டு ஆகும். பரிந்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு டெபிட் கார்டு என்பது ஒரு பிசிகல் அல்லது மெய்நிகர் பணம் செலுத்தும் கருவியாக அடையாளத்துடன், ஒரு சேமிப்பு/நடப்பு வங்கி கணக்கு உடன் இணைக்கப்பட்டு அதன் மூலம் பணம் எடுக்க, ஆன்லைன் முறையில் பணம் செலுத்த, பிஓஎஸ் டெர்மினல்/க்விக் ரெஸ்பான்ஸ் (க்யூஆர்) குறியீடு பரிவர்த்தனைகள் போன்றவற்றை மேற்கொள்ள பயன்படுத்த முடிகிறது.

''கார்டுதாரர்'', என்பது வங்கி வழங்கிய ஒரு இண்டஸ்இண்ட் டெபிட் கார்டு வைத்துள்ள ஒரு வாடிக்கையாளரை குறிப்பிடுகிறது.

''கணக்கு(கள்)'' என்பது கார்டுதாரர்களின் சேமிப்பு அல்லது நடப்பு கணக்குகளை குறிப்பிடுகிறது அவற்றை டெபிட் கார்டின் செல்லத்தக்க செயல்பாடுக்காக தகுதியுள்ள கணக்கு(களாக) வங்கி வரையறுத்துள்ளது.

''கணக்குதாரர்(கள்)/வாடிக்கையாளர்(கள்)'' என்பது வங்கியில் செல்லத்தக்க சேமிப்பு அல்லது நடப்பு கணக்கு வைத்துள்ள தனிநபர்களை குறிப்பிடுகிறது.

''ஏடிஎம்'' என்பது இந்தியாவில் அல்லது வெளிநாடுகளிலுள்ள ஆட்டோமேடெட் டெல்லர் மெஷின்களைக் குறிக்கும், இவை இந்த வங்கியின் அல்லது வேறு ஒரு வங்கியுடையதாக இருக்கலாம் அல்லது வலைப்பின்னலில் பகிர்வு கொண்ட ஒன்றாகவும் இருக்கலாம், இவை மூலமாக கார்டுதாரர் இண்டஸ்இண்ட் பேங்கில் வைத்திருக்கும் தன் கணக்கு(களை) அவருடைய டெபிட் கார்டு மூலமாக அணுகலாம்.

''பிஜஎன்'' என்பது கார்டுதாரருக்கு வங்கி கொடுத்த தனிப்பட்ட அடையாள எண் (ஏடிஎம்-ல் பணம் எடுக்க, இருப்பு விசாரிக்க மற்றும் இன்டர்நெட் பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங்கில் அனுமதிக்கப்பட்ட பரிவர்த்தனைகளை செய்வதற்கு) என்பதை குறிக்கிறது, இது அவ்வப்போது அவரால் தேர்வுச் செய்யப்படுகிறது.

''வணிக'' அல்லது ''வணிக நிறுவனம்'', என்பது எந்த இடத்திலும் அமைந்திருக்கும் நிறுவனங்களை (பிசிகல்/ ஆன்லைன்) குறிக்கிறது அவை கார்டை ஏற்றுக் கொண்டு/உரிய மதிப்பளிக்கிறது மற்றும் இவைகளில் அடங்குபவை வருமாறு: அங்காடிகள், கடைகள், ரெஸ்டாரென்ட்கள், விமான சேவை அமைப்புகள் போன்றவை என இண்டஸ்இண்ட் வங்கி அல்லது மாஸ்டர்கார்டு/விசா/ருபே மூலம் விளம்பரம் செய்யப்படுவது.

''பாயின்ட் ஆஃப் சேல் (பிஓஎஸ்) டெர்மினல்'' என்பது இந்தியா அல்லது வெளிநாட்டில் ஒரு வணிக நிறுவனத்தில் உள்ள பிஓஎஸ் மின்னணு டெர்மினலை குறிக்கிறது, இது கார்டு பரிவர்த்தனைகளை செயலாக்கும் திறனுள்ளது மற்றும் வங்கியுடன் இணைந்த தனது கணக்கில் இருந்து பணத்தை கார்டுதாரர் எடுத்து பொருட்களை வாங்க பயன்படுத்தலாம்.

''பரிவர்த்தனை'' என்பது ஏடிஎம்கள் மற்றும்/அல்லது வணிக நிறுவனங்களில் கார்டை பயன்படுத்தி பணம் எடுப்பது, பொருட்கள் வாங்கியதற்கு பணம் கொடுத்தல்/வணிக நிறுவனங்களில் இருந்து சேவைகளை பெறுவதை குறிக்கிறது.

''சர்வதேச பரிவர்த்தனை'' என்பது கார்டுதாரர் தனது சர்வதேச செல்லத்தக்க டெபிட் கார்டு மூலம் இந்தியாவுக்கு வெளியே மற்றும் சர்வதேச இணையதளங்கள்/செயலிகளில் செய்யப்படும் பரிவர்த்தனைகளை குறிக்கிறது.

''கான்டாக்ட்லெஸ் பரிவர்த்தனை'' என்பது வணிக நிறுவனத்தில் உள்ள என்எப்சி வசதியுள்ள பிஓஎஸ் டெர்மினலில் மெதுவாக தட்டி கார்டு மூலம் பணம் செலுத்துவதை குறிக்கிறது. இந்த பரிவர்த்தனைகள், ஏதாவது சிப்/பின் எண் அடிப்படையில் செய்யப்படுவதை போன்றே பாதுகாப்பானது. அனைத்து கான்டாக்ட்லெஸ் பரிவர்த்தனைகளுக்கும் டெபிட் கார்டுகளின் விதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள இதர அனைத்து விதிகளும் பொருந்தும்.

''தோல்வியுற்ற பரிவர்த்தனை'' என்பது வாடிக்கையாளருக்கு பிரத்யேக காரணம் எதுவும் இல்லாத தகவல் தொடர்பு இணைப்பில் தோல்வி, ஏடிஎம்-ல் பணம் இல்லாதது, காலவரம்பு கடந்த அமர்வுகள் போன்ற ஏதாவதொன்றால் முழுமையாக நிறைவுச் செய்யப்படாத பரிவர்த்தனையை குறிப்பிடுகிறது.

''மாஸ்டர் கார்டு/விசா/ருபே'' என்பது விசா/மாஸ்டர் கார்டு இன்டர்நேஷனல்/என்பிசிஐ-க்கு சொந்தமான அடையாளத்தை சுட்டிக்காட்டுகிறது.

''விசா/மாஸ்டர் கார்டு/ருபே ஏடிஎம் நெட்வொர்க்'' என்பது விசா/மாஸ்டர்கார்டு/ருபே கார்டுகளுக்கு பணம் கொடுக்க எந்தவொரு இடத்திலும் அமைந்துள்ள ஏடிஎம்கள் மற்றும் விசா/மாஸ்டர்கார்டு/ருபே சின்னங்களை வெளிப்படுத்துபவைகளை குறிக்கிறது.

''அணியக்கூடியது'' என்பது ஸ்மார்ட் வாட்ச், வாட்ச் க்ளாஸ்ப், மணிக்கட்டு பட்டைகள், ஸ்டிக்கர்கள், கீ செயின்கள் மற்றும் வங்கி வழங்கிய இதர வடிவங்கள் போன்ற அணியக்கூடிய கான்டாக்ட்லெஸ் சாதனங்களை குறிக்கிறது, வாடிக்கையாளர்கள் இந்த சாதனங்களை பயன்படுத்தி ஒழுங்குமுறையாளர்/வாடிக்கையாளர்(கள்) வரையறுத்த வரம்புக்குள் கான்டாக்ட்லெஸ் பரிவர்த்தனைகளை செய்ய முடியும். இவைகள் ஒரு டெபிட் கார்டுக்கு பதிலாக மற்றும்/அல்லது அதோடு சேர்த்து பணம் கொடுக்க/வங்கி பரிவர்த்தனையை செய்ய (வாடிக்கையாளரின் வெளிப்படையான சம்மதம் அடிப்படையில்) வழங்கப்படுகிறது.

''இண்டஸ் ரிவார்ட்ஸ் மற்றும்/அல்லது ''இண்டி லாயல்டி புரோகிராம்'' என்பது கார்டுதாரர்களுக்கான விசுவாச திட்டத்தை குறிப்பிடுகிறது, இதன் கீழ் டெபிட் கார்டு பயன்படுத்தி செய்யப்படும் பல்வேறு வகை செலவுகளுக்கு வெகுமதி கொடுக்கப்படுகிறது.

1. **டெபிட் கார்டு பெறுவதற்கான தகுதி மற்றும் கார்டுதாரருடன் உள்ள உறவு**

   கார்டு வழங்குதலும் அதன் பயன்பாடும் இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ), அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம் (எஃப்இஎம்ஏ) மற்றும் வங்கி அவ்வப்போது அறிவித்து நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்கும். வங்கி அதன் சேமிப்பு கணக்கு மற்றும் நடப்பு கணக்குதாரர்களுக்கு (அனுமதிக்கப்படும் இயக்க வகைகளுக்கு உட்பட்டு) சர்வதேச டெபிட் கார்டு வசதியை வழங்குகிறது. வங்கி வழங்கியிருக்கும் டெபிட் கார்டு வணிக கடைகள், ஆன்லைன் ஷாப்பிங் மற்றும் பணம் செலுத்துதல், யுடிலிட்டி பில்களுக்குப் பணம் செலுத்துதல், எஸ்ஐபி மூலமாக முதலீடு செய்தல் அல்லது ரொக்கம் எடுத்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தலாம்.

   வாடிக்கையாளர் கோரிக்கையின் பேரில் பல்வகை ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் / இருப்பு சார்ந்த சேனல்கள் வழியே வழங்கப்படும் கார்டுகளை சுயமானதாக அல்லது உதவியுடன் செயல்படும் மாடல்கள், நேருக்கு நேர் அல்லது போன் அடிப்படையிலான மாடல்களாக இருக்கும்.

   வங்கி மற்றும் கார்டுதாரர் இடையில் ஒப்பந்த உறவுமுறை நிலவும், கார்டு பெற்றுக்கொள்ளும்/ பயன்படுத்தும் செய்கை டெபிட் கார்டுகளுக்கான வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

   வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டிருக்கும் டெபிட் கார்டு வங்கிக்குச் சொந்தமானது அதனால் வங்கி கீழ்க்கண்ட உரிமைகளைப் பெற்றிருக்கும்:

   மு எப்பொழுது வேண்டுமானாலும் கார்டில் புதிய பலன்களைச் சேர்க்கலாம் / ஏற்கனவே இருக்கும் சில பலன்களை விலக்கிக் கொள்ளலாம். வங்கியின் பதிவின்படி, வாடிக்கையாளரின் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கும் முகவரி / நம்பர் / மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொண்டு வாடிக்கையாளருக்கு விபரங்களைத் தெரிவிக்க வங்கி தேவைப்படும் முயற்சிகளை மேற்கொள்ளும்;

   மு வாடிக்கையாளருக்கு முன்கூட்டியே அறிவிப்பு செய்து ஆர்பிஐ வழிநடத்தல் குறிப்புகள் அடிப்படையில் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டிருக்கும் கார்டை நிறுத்தி வைக்கலாம் / நீக்கிக் கொள்ளலாம்; மற்றும்

   மு ஒருவேளை கார்டு திருடு போயிருந்தால் / காணாமல் போயிருந்தால் அதைத் தெரிவித்து வாடிக்கையாளர் கோரிக்கை வைக்கும் போது பதிலீட்டு கார்டு ஒன்றை வங்கி வழங்கும் கட்டணங்கள் அட்டவணையில் குறிப்பிட்டிருப்பது போல் இந்த பதிலீட்டு கார்டுகளுக்கான கட்டணங்களை வசூலித்துக்கொள்ளும்

   டெபிட் கார்டு வகை மற்றும் கட்டணம் என்பது கார்டு இணைக்கப்பட்டுள்ள கணக்கு வகையால் நிர்வகிக்கப்படுகிறது மற்றும் வங்கி தனது தனியுரிமை முடிவால் செய்யப்படும் மாற்றத்துக்கு உட்பட்டது. அதன் சிறப்பம்சங்கள் மற்றும் பலன்கள் கார்டு வகை மற்றும் கணக்கு செயல்பாட்டால் நிர்வகிக்கப்படுகிறது. வாடிக்கையாளர்(கள்) கேட்டுக் கொண்டப்படி கார்டு உடன் வங்கி வழங்கும் கொரியரில் ஒரு கடிதம் இருக்கும் அதில் மேற்குறிப்பிட்ட கார்டுக்கு பொருந்தும் சிறப்பம்சத்தின் விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு டெபிட் கார்டு வகை, அதன் மிகச் சமீபத்திய பொருந்தும் சிறப்பம்சங்கள், பலன்கள் மற்றும் தகுதி விதிமுறைகள் உள்ளிட்ட அதிக விவரங்களை பெற வங்கியின் இணையதளத்துக்கு செல்வது அல்லது வங்கியின் கிளை, தொடர்பு மையம் மட்டுமல்லாது அல்லது இதர செல்லத்தக்க தொடர்பு முறைகளில் வங்கியை வாடிக்கையாளர் தொடர்பு கொள்ள முடியும். டெபிட் கார்டை எந்தவொரு சூழ்நிலையிலும் கார்டுதாரர் மாற்ற முடியாது அல்லது இன்னொருவருக்கு ஒதுக்க முடியாது.

2. **பயன்பாட்டு விதிகள்**

   ஏ) **பரிவர்த்தனை தகுதி மற்றும் வரம்புகள்**

   இந்த கார்டு பயன்பாடு இந்தியாவில் (உள்நாட்டு மற்றும் சர்வதேச கார்டுகள்) மற்றும் வெளிநாட்டில் (சர்வதேச கார்டுகள் மட்டும்) செல்லத்தக்கது. இந்த கார்டு நேபாளம் மற்றும் பூட்டானில் அந்நிய செலாவணி பரிவத்தனைக்கு செல்லாது. இந்தியா மற்றும் வெளிநாட்டு வங்கி அவ்வப்போது அனுமதிக்கும் பரிவர்த்தனை தெரிவுகளுக்கு இண்டஸ்இண்ட் வங்கி ஏடிஎம்கள், மாஸ்டர்கார்டு/விசா/ருபே ஏடிஎம் வலைப்பின்னலில் உறுப்பினர்களாக உள்ள இதர வங்கிகளின் ஏடிஎம் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள மாஸ்டர்கார்டு/விசா/ருபே பிஓஎஸ் டெர்மினல்களில்

மட்டுமே இந்த கார்டு செல்லபடியாகும். வணிக பிஓஎஸ்-ல் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் கார்டு பின் எண் உள்ளீடு செய்து அதிகாரமளிக்க வேண்டும் மற்றும் பிஓஎஸ் டெர்மினல் துண்டுச்சீட்டு உருவானதும் செயல்பாடு பூர்த்தியாகிறது. கார்டு அல்லது அணியக்கூடியவைகள் போன்ற கார்டு வடிவ காரணிகள்/மொபைல் சாதனம் அடிப்படையிலான செயல்களை பயன்படுத்தி செய்யப்படும் கான்டாக்ட்லெஸ் பரிவர்த்தனைகளை வங்கி அமைத்த வரம்புக்குள் ஆர்பிஐ வழிகாட்டுமுறைகளுக்கு இணங்க கார்டு பின் எண் பயன்படுத்தாமல் செய்யலாம். வணிக நிறுவனம் கேட்டுக் கொண்டால், பிஓஎஸ் டெர்மினல் உருவாக்கிய விற்பனை சீட்டிற்கு அங்கீகாரம் வழங்க வாடிக்கையாளர் அதில் கண்டிப்பாக கையொப்பமிட வேண்டும். வணிக நிறுவனம் வழங்கிய பொருட்கள்/சேவைகளில் பிரச்சனைகள் (குறைபாடுகள், வழங்குவதில் தாமதம், மோசமான தரவு மட்டுமல்லாது மற்றவையும்) எதுவுமிருந்தால் அதற்கு வங்கி பொறுப்பாகாது மற்றும் அவ்வாறான எந்தவொரு விவகாரமும் வணிக நிறுவனம் மற்றும் வாடிக்கையாளர் இடையே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

கார்டு பயன்படுத்தி நாளொன்றுக்கு பரிவர்த்தனை செய்யப்படும் குறைந்தபட்ச/அதிகபட்ச தொகையை வரையறுக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது மற்றும் அத்தகைய வரம்புகள் கார்டுதாரரின் கணக்கில் இருக்கும் இருப்பு பணத்துக்கு உட்பட்டதாகும். அத்தகைய பரிவர்த்தனை வரம்புகள் அனைத்து ஏடிஎம்களுக்கும் பொருந்தும் மற்றும் பல்வேறு வங்கிகளின் வலைப்பின்னலுக்கு உரிய வெவ்வேறு ஏடிஎம்கள், நாட்டுக்கு நாடு என வித்தியாசப்படலாம் மற்றும் அவ்வப்போது திருத்தமும் செய்யப்படலாம். வெவ்வேறு ஏடிஎம்கள்/வலைப்பின்னல்கள் மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு இந்த வரம்புகள் ஒரே சீராக இல்லாததால் கார்டுதாரருக்கு ஏதாவது இழப்பு அல்லது அசௌகரியம் ஏற்பட்டால் அதற்கு வங்கி பொறுப்பாகாது. மைனர்களுக்கான (10 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு) டெபிட் கார்டு வசதி, கார்டு மீது ஒழுங்குமுறைப்படுத்திய நிலையான பணம் எடுக்கும் வரம்புகளும் வழங்கப்படும்.

வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டிருக்கும் கணக்கு வகை மற்றும் டெபிட் கார்டுக்கு அங்கீகரித்திருக்கும் நடவடிக்கைகள் பட்டியலில் இடம் பெறாத ஒரு நடவடிக்கையை அல்லது கார்டுக்குப் பொருந்தும் வரம்புகளை மீறியிருக்கும் நடவடிக்கைகளை நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது. இன்டர்நேஷனல் டெபிட் கார்டை எஃப்இஎம்ஏ விதிகள், 1999 விதிமுறைகளுக்கு இணங்கி நடப்பு கணக்கில் அனுமதிக்கப்படும் பரிவர்த்தனைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும், அத்துடன் இவ்வாறு செய்யப்படும் பரிவர்த்தனைகள் ஆர்பிஐ அல்லது இந்திய அரசு அவ்வப்போது வகுத்திருக்கும் விதிகள் மற்றும் விதிமுறைகளை மதித்து செய்யப்பட வேண்டும், மேலே சொல்லப்பட்டிருக்கும் விதிகள் / விதிமுறைகளுக்கு இணக்கமில்லாத நடவடிக்கைகளுக்கு விதிக்கப்படும் அபராதம் / பின்விளைவுகளுக்கு வாடிக்கையாளர் பொறுப்பாக்கப்படுவார்.

தாரளமாக்கப்பட்ட பணம் அனுப்பும் திட்டத்தில் (LRS), உள்நாட்டில் வசிப்பவர்கள் இத்திட்டத்தின் கீழ் பணம் அனுப்பும் ஒவ்வொரு தடவையும் அவர்களுடைய நிரந்தர கணக்கு எண்ணை ('PAN') கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டும், இந்த விதிமுறையைப் பின்பற்றாத போது டெபிட் கார்டு மீது செய்யப்படும் சர்வதேச பரிவர்த்தனை வசதிகளை வங்கி நிறுத்திவிடும்.

அனுமதிக்கப்பட்ட வரம்புகளை மீறிய ஏடிஎம் / பிஓஎஸ் வசதிகளின் பயன்பாடு மற்றும் / அல்லது இந்தியாவில் மற்றும் / அல்லது கார்டு பயன்படுத்தப்படும் நாட்டில் பொருந்தும் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு முரணான அல்லது சட்டவிரோதமாகச் செய்யப்படும் நடவடிக்கைகளுக்கு வாடிக்கையாளர் மட்டுமே அவர் தம் சொந்த பொறுப்பில், அந்த நடவடிக்கைகளைச் சார்ந்த அபாயங்களுக்கு பொறுப்பேற்க வேண்டுமே அல்லாமல் அந்த நடவடிக்கைகளுக்கு அல்லது அது போன்ற செயல்பாடுகளுக்கு அல்லது செய்யத் தவறியவைகளுக்கு, அவை தெரிந்து அல்லது தெரியாமல் செய்யப்பட்டிருந்தாலும், வங்கி பொறுப்பேற்காது / வங்கியைப் பொறுப்பாக்க முடியாது.

ஏடிஎம் மெஷின்களிலிருந்து ரொக்கம் எடுப்பதற்கு முன்னர் வாடிக்கையாளர் வங்கி கணக்கில் போதுமான இருப்பு இருப்பதை அவசியம் உறுதி செய்துகொள்ள வேண்டும், அதைப் போலவே டெபிட் கார்டு பயன்படுத்தி வணிக விற்பனை இடங்களில் அல்லது ஆன்லைனில் அல்லது வேறு பணம் செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முன்னர் கணக்கில் போதுமான இருப்பு இருப்பதை வாடிக்கையாளர் உறுதி செய்துகொள்ள வேண்டும். போதுமான இருப்பு இல்லாத காரணத்தால் வாடிக்கையாளர் செய்திருக்கும் நடவடிக்கையை வங்கி ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்ததற்கு வங்கியைப் பொறுப்பாக்க முடியாது.

சுயமாக நேருக்கு நேராகச் சந்திக்காத ஏடிஎம், நெட்-பேங்கிங், மொபைல் பேங்கிங், சாட் போட், குரல் வழி தொடர்புகள், ஐவிஆர் மற்றும் பிராஞ்ச்-அல்லாத டிஜிட்டல் (NBD) போன்ற தொடர்புகளின் போது வாடிக்கையாளர்கள் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளவும், அடையாளத்தை உறுதிபடுத்தவும் டெபிட் கார்டைப் பயன்படுத்தலாம். ஓடிபிக்கு (ஒன் டைம் பாஸ்வேர்டு) பதிவு செய்துகொள்ளுதல் , நெட்-பேங்கிங்கிற்கு பதிவு செய்துகொள்ளுதல் போன்ற சில செயல்பாடுகள் வாடிக்கையாளருக்குக் கிடைக்கிறது.

பி) வழங்கல்கள்

வழங்கல்கள் வாடிக்கையாளர்(களுக்கு) வெல்கம் கிட் உடன் சேர்த்து அல்லது வெல்கம் கிட்-ஐ தொடர்ந்து அனுப்பப்படும் தனிப்பட்ட கடிதங்கள் மூலம் வழங்கப்படுகிறது. வங்கியானது டெபிட் கார்டை கொரியர் மூலம் (அல்லது இதர வழங்கல் முறையில்) அனுப்பி வைக்கும். பெறப்பட்ட கொரியர் உறை கிழிபடாமல்/திறக்கப்படாமல்/சேதமாகாத நிலையில் கிடைத்ததை வாடிக்கையாளர் சரிபார்க்க வேண்டும். கொரியர் உறை கிழிக்கப்பட்டு/சேதமடைந்து/திறக்கப்பட்ட நிலையில் கிடைக்கும் பட்சத்தில், உடனே வாடிக்கையாளர் அருகிலுள்ள வங்கி கிளைக்கு நேரில் சென்று அல்லது மொபைல் பேங்கிங் மூலம் உடனே தகவல் தெரிவிக்க வேண்டும்.

கார்டுக்கான கடவுச்சொல் வெல்கம் கிட்-வுடன் அனுப்பப்படாது என்பதை வாடிக்கையாளர் கவனத்தில் கொள்ள வேண்டும். டெபிட் கார்டு கிடைக்கப்பெற்றதும் வாடிக்கையாளர் அதன் மீது கையொப்பமிட்டு வைத்துக்கொண்டால் வணிக விற்பனையகங்களில் வாடிக்கையாளரை சுலபமாக அடையாளப்படுத்த உதவியாக இருக்கும். கார்டை பயன்படுத்துவதால் / அதை வைத்திருப்பதால் பண வகையில் இழப்பு அல்லது வேறு ஏதாவது இழப்பு ஏற்படும் பட்சத்தில் அதற்கு வாடிக்கையாளர் சுயமாக மட்டுமே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமே அல்லாமல் எந்த ஒரு சூழ்நிலையிலும் வங்கியை அதற்குப் பொறுப்பாக்க முடியாது.

வழங்கல்கள் (எ.கா. டெபிட் கார்டு/பின் எண் கடிதம்), முக்கியமான அறிவிப்புகள் மற்றும் இதர சம்பந்தப்பட்ட வகைகளை, வங்கியின் பதிவேட்டில் வாடிக்கையாளர் கணக்கில் பதிவுச் செய்யப்பட்டுள்ள வாடிக்கையாளரின் அஞ்சல் முகவரி/மின்னஞ்சல்/மொபைல் எண்ணுக்கு வங்கி அனுப்பி வைக்கும். எனவே, அஞ்சல் முகவரி/மின்னஞ்சல் முகவரி/தொலைபேசி எண் ஆகியவற்றில் மாற்றம் எதுவுமிருந்தால் வாடிக்கையாளர் உடனே வங்கிக்கு தெரிவிக்க வேண்டும். அஞ்சல் முகவரி/மின்னஞ்சல்/மொபைல் எண்ணில் உள்ள மாற்றம் பற்றி வாடிக்கையாளர் வங்கிக்கு தெரிவிக்காமல் அதன் காரணமாக அத்தகைய வகைகள் தொலைந்து/சேதமுற்று/செயலிழந்து/தவறாக வழங்கப்பட்டு அதனால் ஏற்படும் எந்தவொரு இழப்பு/பாதிப்பு/அசௌகரியத்துக்கு வங்கி பொறுப்பாகாது.

சி) கார்டு பாதுகாப்புத்தன்மை

ஆர்பிஐ கட்டளைகளுக்கு இணங்கி வங்கி சிப் பொருத்தப்பட்ட டெபிட் கார்டுகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. விவரங்களை பத்திரமாக பாதுகாத்து வைத்துக்கொள்வதற்கும் அவற்றை பரிசீலிப்பதற்கும் இவ்வகை கார்டுகள் கூடுதல் பாதுகாப்பு அளிக்கிறது. இது போன்ற உயர் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதால் கார்டுகள் நகல் எடுக்கப்படுவதும், போலி கார்டுகள் தயாரிக்கப்படுவதும் தடுக்கப்படுகிறது.

வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் டெபிட் கார்டைப் பயன்படுத்தி சந்தை நடவடிக்கைகள், ஒழுங்குமுறை அதிகாரங்கள் மற்றும் வங்கியின் சொந்த வணிக தேவைகளுக்கு ஏற்ப, இரண்டு நிலை அடையாளத்தில் உறுதிபடுத்தலாம், இதற்கு வங்கியின் ஒழுங்குமுறை வரம்புகள் சரி என்று கருதுவது போல் பிஜஎன், ஒரு தடவைக்கான பாஸ்வர்ட் அல்லது வேறு ரகசிய வழிமுறைகள் கையாளப்படலாம்.

பரிவர்த்தனைகளை செய்ய கார்டை செயல்படுத்த வாடிக்கையாளர்கள் கார்டு பின் எண்ணை ஆக்டிவேட் செய்ய வேண்டும். இந்த பிஜஎன் நம்பரை வாடிக்கையாளர் இண்டஸ்இண்ட் வங்கி மொபைல் பேங்கிங்/நெட் பேங்கிங்/இணையதளம் ஏடிஎம் அல்லது போன் பேங்கிங் பயன்படுத்தி அமைத்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட கணக்கு வகைகள் மற்றும்/அல்லது வாடிக்கையாளர் கேட்டுக் கொண்டால் பின் எண் மூடப்பட்டிருக்கும் கடிதஉறையில் அனுப்பப்படும். இந்த சூழ்நிலையில் கார்டை செயல்பாட்டிற்கு கொண்டு வர வாடிக்கையாளர் பின் எண்ணை புதுசாக அமைக்கலாம்/மாற்றலாம் (இண்டஸ் இண்ட் மொபைல் பேங்கிங்/நெட் பேங்கிங்/ இணையதள ஏடிஎம் பயன்படுத்தி அல்லது போன் பேங்கிங் மூலமாக) அல்லது உறையில் வந்த பின் எண்ணை பயன்படுத்தி பிஓஎஸ்/ஏடிஎம்மில் ஒரு பரிவர்த்தனையை செய்ய முடியும். வங்கியில் உறையில் வைத்து அனுப்பிய ஆரம்ப கடவுச்சொல்/பின் எண்ணை உடனே மாற்ற பரிந்துரைக்கப்படுகிறது. இ-காமர்ஸ் பரிவர்த்தனையை உறுதிச் செய்வதற்கான ஓடிபி, வாடிக்கையாளரின் பதிவுச் செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு அனுப்பப்படுகிறது.

பிஜஎன் / ஓடிபி விவரங்களை அனுப்புவதில் வங்கி மேற்கொள்ளும் பத்திரமான நடவடிக்கைகள் குறித்து வாடிக்கையாளர்களுக்கு வங்கி விளக்கமாகத் தெரிவிக்கும். பிஜஎன் / அல்லது அதனுடன் தொடர்புடைய இதர பிற விவரங்களை கார்டுதாரரைத் தவிர்த்து வேறு யாருடனும் பகிர்ந்துகொள்ளாது என்பதற்கு வங்கி உறுதி அளிக்கிறது.

பிஜஎன் / ஓடிபி கொண்டு உறுதிசெய்யப்பட்ட பரிவர்த்தனைகளை வங்கி செயல்படுத்த வாடிக்கையாளர் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார், டெபிட் கார்டு பயன்படுத்தி சரியான பிஜஎன் விவரங்களால் உறுதி செய்யப்பட்ட பரிவர்த்தனைகளை நிறைவேற்றுவதால் வங்கிக்கு அவைகளை உறுதி செய்யும் பொறுப்பு அல்லது கடமை எதுவும் இருக்காது.

டெபிர் கார்டுகளை பத்திரமாக வைத்தல்

டெபிட் கார்டு மற்றும் அதன் பின் எண், ஓடிபி, கார்டு தகவல் மற்றும் லாகிங் விவரங்கள் மட்டுமல்லாது, போன் பேங்கிங் விவரங்கள் மற்று இதர அனைத்து வசதிகளும் வங்கியில் வைத்துள்ள கணக்கில் நிதி பரிவர்த்தனைகளை செய்யும் கருவிகள் என்பதை வாடிக்கையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்ட விவரங்களை பாதுகாப்பாக வைத்திருப்பது மற்றும் ரகசியத்தன்மைக்கும் மற்றும் எதிர்காலத்தில் வங்கி வழங்கும் சேவைகளுக்கான இதர அனைத்து நம்பிக்கை சான்றுகளுக்கு வாடிக்கையாளரே முற்றிலும் பொறுப்பாவார். இந்த விவரங்களை எந்தவொரு சூழலிலும் யாருக்கும் வாடிக்கையாளர் தெரியப்படுத்தக் கூடாது.

ஒப்படைக்கத் தக்கவைகளை வங்கி வாடிக்கையாளர்களுக்கு வெல்கம் கிட் உடன் அனுப்பி வைக்கும் அல்லது வெல்கம் கிட் அனுப்பி வைத்த பிறகு தனி தபாலில் அனுப்பி வைக்கும். வங்கியிடம் வாடிக்கையாளர் பதிவு செய்து வைத்திருக்கும் தபால் முகவரியில் மட்டுமே, இது கேஒய்சி விவரங்களின் ஒரு பகுதியாகப் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கும், அனுப்பிவைக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மிகுந்த பாதுகாப்பை வழங்கும் வங்கியின் நோக்கத்தால் கடவுச்சொல்/பின் எண்களை உரிமைக்கோர வாடிக்கையாளர்கள் சங்கடப்படுகின்றனர். இதன் காரணமாக, பின் எண்ணை ஆன்லைன் முறையில்/ஏடிஎம் மூலம் குறிப்பிட்ட சில தனிப்பட்ட விவரங்களை வழங்கியப் பிறகு உருவாக்கிக் கொள்ளும் தெரிவு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. எனினும், பின் எண் அஞ்சல் மூலம் நேரடியாக அனுப்ப வேண்டும் என வாடிக்கையாளர் கேட்டுக் கொண்டால், அதன் பிறகு எழும் எந்தவொரு மோசடி/தவறான பயன்பாட்டுக்கு வங்கி பொறுப்பாகாது. டெபிட் கார்டு பெற்றுக் கொண்டதும், பிஓஎஸ் அவுட்லெட்களில் வாடிக்கையாளரை சுலபமாக அடையாளப்படுத்துவதற்கு அதில் வாடிக்கையாளர் கையொப்பமிட்டிருக்க வேண்டும். பின் எண்களை அடிக்கடி மாற்றிக் கொள்ளவும்.

சிப் டெபிட் கார்டு விவரங்கள், பிஜஎன் விபரங்கள், ஓடிபி ஆகியவை கார்டுதாருக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும் என்பதை வாடிக்கையாளர் கவனித்து பின்பற்ற வேண்டும், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இவற்றை மற்றவர்களுக்கு தெரிவிக்கவோ / வெளிப்படுத்தவோ கூடாது, பிஜஎன் / ஓடிபி விவரங்களை வாடிக்கையாளர் இரகசியமாக வைத்திருக்க வேண்டும். கணக்கை முடித்துக்கொள்ளும் போது / கார்டை திருப்பிக் கொடுக்கும் போது

வாடிக்கையாளர்கள் டெபிட் கார்டை வேறு ஒருவருக்குக் கொடுக்கக் கூடாது, வங்கி கிளையில் இதற்கென அதிகாரம் பெற்றிருக்கும் வங்கி அதிகாரியிடம் மட்டுமே அதைக் கொடுக்க வேண்டும்.

டெபிட் கார்டு மற்றும் பிஐஎன் விபரங்களைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளும் பொறுப்பு வாடிக்கையாளரைச் சார்ந்திருக்கும். ஏடிஎம் / பிஓஎஸ் இடங்களில் வாடிக்கையாளர் பிஐஎன் நம்பரை உள்ளீடு செய்யும் போது மற்றவர்கள் பார்க்காமல் இருப்பதை உறுதிச் செய்துகொள்ள வேண்டும்.

பின் மற்றும் கார்டு தனித்தனியே வைத்திருப்பதை உறுதிச் செய்ய வழிகாட்டுதல் உள்ளிட்டதை கார்டை பராமரிக்க எல்லா சமயத்திலும் பின்பற்ற வாடிக்கையாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது, இதனால் எந்தவொன்றின் பாதுகாப்பு குறைந்து அதனால் டெபிட் கார்டை பயன்படுத்தி வாடிக்கையாளர் கணக்கில் இருந்து மோசடி செய்ய முடியாது. வாடிக்கையாளர் பின் எண்ணை மனதில் பதிய வைத்துக் கொள்ளவும் பின் எண்ணை ஒரே இடத்தில் வைத்திருக்கவோ அல்லது மற்றவர்கள் சுலபமாக அணுகக் கூடிய எங்காவது எழுதி வைக்கவோ கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறது, இதனால் வாடிக்கையாளரின் கணக்கு பாதுகாக்கப்படுவது உறுதிச் செய்யப்படுகிறது.

கார்டு பயன்பாட்டிற்கான பிஐஎன் அல்லது அதன் குறிஎண் எதையும் எந்த வடிவத்திலும் மற்றவர்கள் ஊகித்து தெரிந்து கொள்ள ஏதுவாக அல்லது அணுக முடிவதாக இல்லாமலிருக்க கார்டுதாரர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துகொள்ள கடமைப்பட்டிருக்கிறார், ஒருவேளை தவறுதலாக அல்லது வேண்டுமென்றே இந்த தகவல் கிடைக்கப் பெற்றாலும் மூன்றாம் நபர் ஒருவரால் எதுவும் செய்ய இயலாத வகையில் பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

ஐ). பரிவர்த்தனை அறிவிப்பு மற்றும் இதர தகவல் தொடர்பு

ஒழுங்குமுறை வழிநடத்தல் குறிப்புகள் படி டெபிட் கார்டு பயன்படுத்தி செய்யப்படும் பரிவர்த்தனைகள் குறித்த எச்சரிக்கைச் செய்திகள் எஸ்எம்எஸ் மற்றும் மின்னஞ்சல் மூலமாகத் தெரிவிக்கப்படும். வாட்ஸ்அப் மற்றும் இதர பிற டிஜிட்டல் சேனல்கள் மூலம் வங்கி இந்த எச்சரிக்கைச் செய்திகளை அனுப்பி வைக்கும். அதனுடன், வங்கி பதிவேடுகளில் இருக்கும் வாடிக்கையாளரின் மொபைல் நம்பர் மற்றும் மின்னஞ்சல் முகவரியில் டெபிட் கார்டு சம்பந்தப்பட்ட இதர பிற அறிவிப்புகள் / செய்திகளை வங்கி அனுப்பி வைக்கும். இவ்வாறு தகவல் அனுப்பும் முகவரி மாற்றமடைந்திருக்கும் விவரங்களை வங்கிக்குத் தெரியப்படுத்தாமல் இருந்ததால் உருப்படிகள் சேதம் / தவறுதல் / தவறாக டெலிவரி செய்யப்பட்டிருந்தால் நேர்ந்த இழப்பு / சேதம் / அசௌகரியம் எதற்கும் வாடிக்கையாளர் வங்கியைப் பொறுப்பாக்க முடியாது.

வங்கியின் போன் பேங்கிங் வசதி அல்லது வங்கியின் இன்டர்நெட் வசதி / மொபைல் பேங்கிங் பயன்படுத்தி டெபிட் கார்டு பயன்படுத்தி செய்திருக்கும் நடவடிக்கைகள் விவரங்களை வாடிக்கையாளர் தெரிந்துகொள்ள முடியும். அறிக்கைகளில் தவறுகள் / முறைகேடான நடவடிக்கைகள் ஏதேனும் தெரியவரும் பட்சத்தில் அவற்றை வங்கிக்கு 15 நாட்களுக்குள் தெரிவித்துவிட வேண்டும். 15 நாட்களுக்குள் வாடிக்கையாளர் வங்கிக்கு எதுவும் தெரிவிக்கவில்லை என்றால், அறிக்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நடவடிக்கை விவரங்கள் உண்மையில் சரியானவை, தவறுகள் எதுவுமில்லை என்று வங்கி கருதும்.

இ) கார்டு இழப்பு / மோசடி

கீழேயுள்ளவற்றில் ஏதேனும் ஒன்று நிகழும் பட்சத்தில் வாடிக்கையாளர் உடனே வங்கிக்குத் தெரியப்படுத்திவிட வேண்டும்:-

ஏ. கார்டு திருடு போதல் அல்லது காணாமல் போய்விடுதல் அல்லது கார்டு பயன்படுத்தி மோசடி செய்திருத்தல் அல்லது அதன் விவரங்கள் நகல் எடுக்கப்பட்டிருத்தல்

பி. வாடிக்கையாளர் கணக்கில் அங்கீகரிக்கப்படாத ஒரு பரிவர்த்தனை செய்யப்பட்டிருத்தல்

இது போன்ற நிகழ்வுகளை தாமதம் செய்யாமல் வாடிக்கையாளர் உடனே (போன் பேங்கிங் மூலமாக / அருகிலிருக்கும் கிளை ஒன்றுடன் தொடர்பு கொண்டு / ஏற்கத்தக்க ஒரு தகவல் தெரிவிக்கும் வழியில்) வங்கிக்குத் தெரியப்படுத்திவிட வேண்டும்.

கார்டு சேவைகள் குறித்த காரணங்களை வங்கிக்குத் தெரிவிக்க கீழ்க்கண்ட வழிமுறைகளை வாடிக்கையாளர் பயன்படுத்தலாம்:

i. கிளைகள்: காணாமல் போயிருக்கும் அல்லது திருடப்பட்டிருக்கும் கார்டு விவரங்களைத் தெரிவித்து அதன் பயன்பாட்டைத் தடுக்க வாடிக்கையாளர் வங்கி கிளை ஒன்றிற்குச் சென்று தன் குறையைத் தெரிவித்து கோரிக்கை செய்துகொள்ளலாம்.

ii. தொடர்பு மையம்: வங்கியின் கால் சென்டர் 27 து 7 வேலை செய்துகொண்டிருக்கும், இதில் கட்டணமில்லாத சேவையும் கட்டணம் செலுத்தி பேசும் சேவையும் கிடைக்கின்றன. பகல் அல்லது இரவு எப்பொழுது வேண்டுமானாலும் வாடிக்கையாளர் வங்கியுடன் தொடர்பு கொண்டு தன் குற்றச்சாட்டை / கோரிக்கையை இங்கே பதிவு செய்யலாம். தொலைந்து போயிருக்கும் / திருடப்பட்டிருக்கும் கார்ட் ஆன்லைன் ஹாட் லிஸ்டிங் செய்யும் வசதியும் இங்கே கிடைக்கும்.

iii. இண்டஸ்இண்ட் பேங்க் நெட் பேங்கிங்/ இண்டஸ்இண்ட் பேங்க் மொபைல் பேங்கிங்: வாடிக்கையாளர்கள் டிஜிடல் சேனல்களைப் பயன்படுத்தி அவர்களுடைய டெபிட் கார்டு பயன்பாட்டை நிறுத்தி விடலாம், பதிலீட்டு கார்டுகளுக்கு விண்ணப்பிக்கலாம், பரிவர்த்தனைகளுக்கான வரம்புகளை நிர்ணயிக்கலாம்.

iv. டிதி.எஸ்எம்எஸ் சேவை: டெபிட் கார்டு பயன்பாட்டை தடை செய்ய வாடிக்கையாளர்கள் எஸ்எம்எஸ் சேவைகளையும் பயன்படுத்தலாம்

மேலே சொல்லப்பட்டுள்ள குறிப்புகள் பற்றிய அதிக விவரங்களை, வங்கியின் இணையதளத்தில் கார்டுகள் பிரிவின் கீழ் பட்டியலிட்டுள்ள டெபிட் கார்டு பக்கத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவில் பார்த்து படிக்கவும். கார்டு தொலைத்து விடுவது அல்லது தவறான கைகளுக்கு கார்டு சென்று அல்லது திருடிய கார்டுகளை பயன்படுத்தி, அந்த திருட்டு/தொலைந்து போனது பற்றி வாடிக்கையாளர் தெரிவிப்பதற்கு முன்பு கார்டு பயன்படுத்தி செய்யப்படும் ஏதாவது மோசடி பரிவர்த்தனை/தவறான பயன்பாட்டிற்கு வங்கி பொறுப்பாகாது.

கார்டு காணாமல் போய்விட்டபடியால், திருடப்பட்டிருப்பதால் அல்லது அதன் விவரங்கள் நகல் எடுக்கப்பட்டிருப்பதால் வாடிக்கையாளர் கோரிக்கை செய்து கொண்டதற்கு ஏற்ப வங்கி வாடிக்கையாளருக்கு பதிலீட்டு கார்டு ஒன்று வழங்கும் (பொருந்தும் கட்டணங்களை வசூலித்து), வங்கியின் பதிவுகளின்படி, இந்த கார்டு வாடிக்கையாளர் பதிவு செய்துகொண்டிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

எஃப்)முடித்து கொள்ளுதல்

டெபிட் கார்டை/ சிப் டெபிட் கார்டை முடித்துக்கொள்ள வாடிக்கையாளர் வங்கியிடம் எழுத்து பூர்வமாக கோரிக்கை செய்துகொள்ளலாம். இவ்வாறு கோரிக்கை செய்துகொள்ளும் சமயத்தில் டெபிட் கார்டு / சிப் டெபிட் கார்டுக்கு எதிராக நிலுவையிலிருக்கும் அனைத்து தொகையையும் வாடிக்கையாளர் வங்கிக்குச் செலுத்திவிட வேண்டும், அதன் பிறகே முடித்துக்கொள்ளும் கோரிக்கையை வங்கி பரிசீலிக்கும். நிலுவையிலிருக்கும் தொகைக்கு எதிராக வங்கியில் இருக்கும் வாடிக்கையாளர் கணக்கில் கிடைக்கும் தொகையிலிருந்து ஈடுசெய்யும் தொகையை ஒதுக்கீடு செய்யும் உரிமையை வங்கி தன்னிடம் வைத்திருக்கும்.

கார்டு சேவை முடித்துக்கொள்ளப்பட்டவுடன் / கார்டை திருப்பிக் கொடுத்தவுடன் / கார்டு பயன்பாட்டைத் தடுக்கும் கோரிக்கையை வங்கி ஏற்றுக்கொண்டவுடன் வாடிக்கையாளர் கார்டை இரண்டு துண்டுகளாக வெட்டி அதைச் சேதப்படுத்திவிட வேண்டும். சேதப்படுத்தும் போது மேக்னெடிக் பட்டியை இரண்டு துண்டாக வெட்ட வேண்டும், சிப் பகுதியையும் இரண்டு துண்டாக வெட்ட வேண்டும்.

ஒருவேளை கணக்கை முடித்துக்கொள்ளும் போது, வாடிக்கையாளர் அவரிடமிருக்கும் ஏடிஎம் / டெபிட் கார்டை வங்கியிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ஒருவேளை ஏதாவது ஒரு காரணத்திற்காக வாடிக்கையாளர் அவர் / அவள் வங்கிக் கணக்கை முடித்துக்கொள்ளும் போது, கார்டு செயல்பாடுகள் முடக்கப்பட்டுவிடும். வாடிக்கையாளர் கார்டை அழித்துவிட வேண்டும் என்று வங்கி கேட்டுக்கொள்ளும்.

கார்டு பயன்பாட்டை கட்டுப்படுத்துவது, முடித்து வைப்பது அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பது வணிக அல்லது பாதுகாப்பு காரணங்களுக்கு அவசியம் என வங்கி நியாயமாக நம்பும்பட்சத்தில் முன்னறிவிப்பு எதுவுமின்றி வங்கி அவ்வாறே செய்யும்.

ஜி) செல்லத்தக்கது

கார்டில் காலாவதி மாதம் என குறிப்பிட்டுள்ள மாதத்தின் கடைசி வேலை நாள் வரை கார்டு செல்லுபடியாகும். கார்டின் முன்பக்கத்தில் வரையறுத்த காலவரம்பு வரை கார்டு செல்லுபடியாகும். வங்கி தனது தனியுரிமை முடிவுப்படி கணக்கு நிலை, கார்டு நிலை, பரிவர்த்தனை நிலை போன்றவற்றை மதிப்பாய்வுச் செய்து தகுதியுள்ள வாடிக்கையாளர்களுக்கு காரிடின் காலாவதி தேதிக்கு முன்பாகவே புதுப்பிக்கப்பட்ட டெபிட் கார்டை அனுப்பி வைக்கும். புதுப்பிக்கப்பட்ட கார்டு அனுப்பப்படும் முன்பு வாடிக்கையாளர்களுக்கு முதலில் தகவல் தெரிவிக்கப்படும் மற்றும் புதிய கார்டை ஏற்க மறுக்கும் தெரிவு அவர்களுக்கு உள்ளது.

அனைத்து கார்டுகளும் வழங்கப்படும்/மீள்வழங்கல் சமயத்தில் இந்தியாவுக்குள் பயன்பாட்டுக்கு தொடர்பு பேஸ் பாயின்ட்களில் மட்டுமே பயன்படுத்த வகை செய்யப்பட்டிருக்கும் (ஏடிஎம் மற்றும் பிஓஎஸ் அதாவது பாயின்ட் ஆஃப் ஸேல் சாதனங்கள்). பயன்பாட்டு உசிதத்தை வாடிக்கையாளரே செயல்படுத்த/செயலிழக்க செய்யலாம் மற்றும் கார்டு மீது பரிவர்த்தனை வரம்புகளை எந்த சமயத்திலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச பரிவர்த்தனை வரம்புகளில் ஏடிஎம் / பிஓஎஸ் / இ-காமர்ஸ் / வங்கியின் நெட் பேங்கிங்/மொபைல் பேங்கிங் மூலம் கான்டாக்ட்லெஸ் முறையில் மாற்றங்களை செய்வதன் மூலம் நிர்வகிக்க முடியும்.

என்ஆர்ஓ வாடிக்கையாளர்களுக்கு உள்நாட்டு பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே டெபிட் கார்டுகள் வழங்கப்படுகிறது ஆகவே சர்வதேச பரிவர்த்தனை வரம்புகள் வசதி செய்யப்படாது.

எச்) சிறப்பம்சங்கள் மற்றும் கட்டணங்கள்

- **கட்டணங்கள்:**

ஏடிஎம் / பிஓஎஸ் / மற்ற கருவிகளில் கார்டைப் பயன்படுத்துவதற்கு சேவை கட்டணம் மற்றும் / அல்லது பரிவர்த்தனை கட்டணம் மற்றும் /அல்லது பரிசீலனைக் கட்டணம் மற்றும்/ அல்லது மாற்றல் கட்டணம் கார்டுக்குரிய கணக்கிலிருந்து வசூலிக்கப்படும். கார்டு பயன்படுத்தி செய்யப்படும் நடவடிக்கைகளைச் சார்ந்த செலவினங்கள் / கட்டணங்கள் / மாற்றல் கட்டணங்கள் அதற்குரிய கணக்கில் பற்று வைத்து வசூலிக்கப்படும், இவற்றைச் செலுத்தும் பொறுப்பு வாடிக்கையாளரைச் சேர்ந்ததாக இருக்கும்.

டெபிட் கார்டு வழங்குதல் / பயன்பாடு / பதிலீட்டு கார்டுகள் / பயன்பாட்டைத் தடை செய்தல் (ஹாட் லிஸ்டிங்) ஆகியவற்றிற்கான கட்டணங்கள் / செலவினங்கள் குறித்த விவரங்களை இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கட்டணங்கள் அட்டவணையில் தெரிந்து கொள்ளலாம்.

- **வெகுமதிகள் திட்டம்**

இண்டஸ் ரிவார்ட்கள் மற்றும்/அல்லது இண்டி விசுவாச திட்டங்கள் என்பது வங்கியில் டெபிட் கார்டு வைத்துள்ள வாடிக்கையாளர்களுக்கு பிரத்யேகமாக வழங்கப்படும் வாடிக்கையாளர் வெகுமதி திட்டமாகும்.

இந்த திட்டத்தின் கீழ், டெபிட் கார்டில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு வாடிக்கையாளர்கள் வெகுமதி புள்ளிகள்/ இண்டி ஜெம்களை சேர்த்து வர முடியும். அவ்வாறு சேரும் பாயின்ட்களை அந்த பாயின்ட்கள் காலாவதிக்கு முன்பு கணக்கில் திரும்ப வரும் பணமாக மீட்க அல்லது வாடிக்கையாளரிடம் உள்ள டெபிட் கார்டு வகையின் அடிப்படையில் பொருட்கள் பட்டியலுக்கு எதிராக மீட்க முடியும்.

வாடிக்கையாளர் செய்யும் அனைத்து பரிவர்த்தனைகளுமே இண்டஸ் ரிவார்ட் திட்டம் அல்லது இண்டி லாயல்டி திட்டத்தின் கீழ் பலனடைய தகுதி பெறாது. தகுதிபெறும் பரிவர்த்தனைகள் பட்டியலை வங்கியின் இணையதளத்திலிருந்து அல்லது மொபைல் பேங்கிங் பயன்படுத்தி வங்கியை தொடர்பு கொள்வது அல்லது வங்கியின் ஏதாவதொரு கிளைக்கு நேரில் செல்வது அல்லது வேறு ஏதாவது செல்லத்தக்க தகவல்தொடர்பு முறையில் வாடிக்கையாளர்கள் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

இண்டஸ் ரிவார்ட்ஸ் அல்லது இண்டி லாயல்டி திட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்ட ரிவார்ட் பாயின்ட்களை வங்கியின் ரிவார்ட் மீட்டெடுப்பு கொள்கைப்படி மீட்டுக் கொள்ள முடியும். வாடிக்கையாளர்கள் இந்த ரிவார்ட் பாயின்ட்களை, ஒரு குறிப்பிட்ட வரம்பு எண்ணிக்கையில் ரிவார்ட் பாயின்ட்கள் சேர்ந்தப் பிறகு மட்டுமே மீட்க முடியும், அந்த வரம்பை அவ்வப்போது வங்கியே தீர்மானிக்கும்.

ரிவார்டு புள்ளிகள் சேகரம் / புள்ளிகளை ரிடெம்ப்ஷன் செய்தல், கேஷ் பேக்-ற்கான தகுதிநிலை / கேஷ் பேக் தொகை அல்லது வாடிக்கையாளர் கணக்கில் கேஷ் பேக் வரவு வைக்கப்படும் காலவரையறை ஆகியவை குறித்த பிரச்சனைகள் / குறைபாடுகள் குறித்த வங்கியின் முடிவு இறுதியானதாகவும் அதுவே வாடிக்கையாளரைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

பரிசுத் திட்டங்கள் மற்றும் இதர பிற விளம்பர நிகழ்ச்சிகள் அனைத்தும் காலவரையறை கொண்டிருக்கும் என்பதால் அவற்றை வங்கி எப்பொழுது வேண்டுமானாலும் வாடிக்கையாளருக்கு முன்னறிவிப்பு எதுவும் செய்யாமல் நிறுத்திக் கொள்ளும்.

• காப்பீடு:

டெபிட் கார்டு, கார்டு வகையின் அடிப்படையில் ஒரு உள்ளடக்கிய காப்பீடு பாதுகாப்புடன் (இலவசமாக/கட்டணத்துடன்) வாடிக்கையாளருக்கு வருகிறது. இந்த காப்பீட்டில் தொலைந்து போன கார்டுக்கு பொறுப்பு, கொள்முதல் பாதுகாப்பு, தனிநபர் விபத்தில் இறக்க நேரிட்டால் காப்பீடு, விமான விபத்துக்கு காப்பீடு, சோதிக்கப்பட்ட பேக்கேஜ் தாமதத்துக்கு காப்பீடு, ஏடிஎம் தாக்கு காப்பீடு, ஆன்லைன் மோசடியிலிருந்து பாதுகாப்பு காப்பீடு என சம்பந்தப்பட்ட காப்பீடு பாதுகாப்புக்கு விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் உள்ளடங்கும். வங்கியால் வழங்கப்படும் காப்பீடு பாதுகாப்புக்கு உரித்தாகும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியப் பிறகு மட்டுமே வாடிக்கையாளர்கள் பலன்களை உரிமை கோர தகுதி பெறுவர்.

காப்பீடு தொகையானது கார்டு வகை, கணக்கு, பயன்பாடு ஆகியவற்றை பொறுத்து வித்தியாசப்படும். அவ்வாறான காப்பீட்டின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை வங்கியானது தனது சுயவிருப்ப முடிவுப்படி அவ்வப்போது மாற்றிக் கொள்ளும் உரிமை உள்ளது. மிகச் சமீபத்திய பொருந்தும் காப்பீடு பாதுகாப்பு விவரங்கள், தொடர்புள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள், அதோடு க்ளெய்ம் மற்றும் ஆவணமாக்கும் செயலாக்கத்துக்கு வங்கியின் இணையதளத்தை வாடிக்கையாளர் படித்து பார்க்கவும். இந்த விவரங்கள் கிடைக்கிறது இதில்: https://www.indusind.com/in/en/personal/insurance-on-card.html. தனிநபர் விபத்தில் இறப்பு, விமான விபத்து காப்பீடு போன்றவற்றில் க்ளெய்ம் கோர நாமினி விவரங்கள் தேவைக்கு, டெபிட் கார்டு உடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கில் கிடைக்கும் ''தனிநபர் க்ளெய்ன்ட்கள்'' என்பதில் உள்ள நாமினி விவரங்கள் மட்டுமே காப்பீடு பலன்களை உரிமை கோரும் நோக்கத்துக்கு பயன்படுத்தப்படும். வாடிக்கையாளரின் நாமினி விவரங்கள் கணக்கில் கிடைக்காத பட்சத்தில், ஆவணங்களின்படி உறுதிச் செய்யப்பட்ட ''தனிநபர் க்ளெய்ன்ட்''டின் சட்டப்பூர்வ வாரிசுகள் மற்றும் காப்பீடு நிறுவனம் உத்தரவிட்டப்படி உரிய செயலாக்கத்தை உரிமை கோரலுக்கு தொடங்க முடியும். தனிநபர்-கணக்கு அல்லாதவற்றுக்கு, நிறுவனம், கம்பெனிகள் போன்ற வாடிக்கையாளருக்கு நாமினி விவரங்கள் இருக்காது என்பதால், டெபிட் கார்டின் காப்பீடு பாதுகாப்புக்கு தேவையான நாமினி விவரங்கள் பொருந்தாது. காப்பீடு கிடைப்பது ஒவ்வொரு அறிக்கையிலும் இதர தகவலுடன் உள்ளடங்கியதாக சேர்க்கப்பட்டுள்ளது.

• துணை அட்டைகள்

திட்ட அம்சங்களின் அடிப்படையில், ஏற்கனவே உள்ள சேமிப்பு கணக்கிற்கு துணை டெபிட் கார்டுகளை பெற வாடிக்கையாளர்கள் தகுதி பெறலாம். இந்த துணை அட்டைகளின் பயன்பாடு முற்றிலும் வாடிக்கையாளரை சார்ந்தது மற்றும் அவரே எல்லாவற்றுக்கும் பொறுப்பு மற்றும் இந்த அம்சத்தை வெறும் வசதியாக மட்டுமே வங்கி வழங்குகிறது. துணையாக வழங்கிய டெபிட் கார்டின் வரம்புகள், கட்டணம் மற்றும் சிறப்பம்சங்கள் அந்த டெபிட் கார்டு வகையை பொறுத்தது மற்றும் முதன்மை கணக்குதாரருக்கு கொடுக்கப்பட்ட டெபிட் கார்டை சார்ந்தது அல்ல.

ஐ) தகவலை பகிர்வது/வெளிப்படுத்துவது

வங்கியின் டெபிட் கார்டை ஏற்றுக் கொண்டு பயன்படுத்தும் வாடிக்கையாளர் எந்தவொரு தகவல் மற்றும்/அல்லது ஆவணங்களை அவ்வப்போது வங்கி பயன்படுத்த, பகிர மற்றும் வெளிப்படுத்துவதை ஏற்றுக் கொண்டு, அதிகாரமளித்து, உறுதிச் செய்து மற்றும் அனுமதிக்கிறார் இவைகளில் வாடிக்கையாளரின் பதிவுச் செய்த தகவல் தொடர்பு முகவரிகள்/விவரங்கள் (அஞ்சல், மின்னஞ்சல், மொபைல் எண், சமூக ஊடக தளம்/சேனல்கள் போன்றவை) உள்ளடங்கும், வாடிக்கையாளர்(கள்) விருப்பப்பட்டு பதிவுச் செய்து/பகிர்ந்துள்ளார் மற்றும் எதிர்காலத்தில் வங்கியுடன் எந்தவொரு சமயத்திலும் விருப்பத்துடன் பின்கூறப்பட்டுள்ளவர்களுடன் பதிவுச் செய்யவும்/பகிரவும் அனுமதிப்பார்:

1. வங்கியின் எந்தவொரு தலைமை/துணை/சார்பு/அசோசியேட் உடன்;

2. இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ)/சர்வதேச நிதி சேவை மையம் (ஐஎப்எஸ்சி);

3. இந்திய அரசுடன் அதன் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி/குழு மூலமாக;

4. நீதிமன்றங்கள்/விசாரணை முகமைகள்;

5. இந்திய செக்யூரிட்டிஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டு (செபி);

6. பங்கு வர்த்தகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள்;

7. தணிக்கையாளர்கள் மற்றும் தொழில்முறை ஆலோசகர்கள்;

8. வங்கி ஏற்பாடு செய்த ஏதாவது மூன்றாவது தரப்புகள் மற்றும் முகவர்/சேவை வழங்குபவர்கள்/தொழில்முறையிலான ஆலோசகர்களுக்கு; அத்தகைய தகவலை பெற தகுதியுள்ள இதர ஏதாவது சட்டப்பூர்வ அமைப்பு/அதிகாரமளிக்கப்பட்ட தனிநபர்;

9. சிபில் உள்ளிட்ட கிரெடிட் இன்ஃபர்மேஷன் அமைப்பு; மற்றும்

10. அத்தகைய தகவலை வங்கி பகிரும் தேவையுள்ள வேறு ஏதாவது அமைப்பு.

மேற்கூறப்பட்டுள்ள தகவல் பின்கூறப்பட்டுள்ள நோக்கங்கள் ஏதாவற்றுக்காக வங்கியால் பகிரப்படலாம்:

1. வங்கியில் இருந்து, மத்திய கேஒய்சி பதிவத்தில் இருந்து தகவல் பெறுவது மற்றும்/அல்லது வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குபவர்கள்/முகமை(கள்) மூலமாக/ வாடிக்கையாளர்களின் கணக்கு(கள்) செயல்படுத்துவது/ வங்கியில் இருந்து வாடிக்கையாளர்(கள்) பெறப்பட்ட சேவைகள் தொடர்பாக தொழில்முறை ஆலோசகர்களிடம் இருந்து பெறுவது; மற்றும்/அல்லது

2. ஏபிஐ அடிப்படையிலான உறுதிச் செய்தல் இதில் வாடிக்கையாளர்களின் விவரங்கள் தன்னியக்க முறையில் பெறப்படுகிறது/அவர்களது வங்கி கோரிக்கைகள்/விண்ணப்பங்கள்/ வங்கியின் இணைய செயலிகள்/முறைமைகள் மூலம் செயலாக்கப்படுவதற்கு; மற்றும்/அல்லது

3. வங்கியின் திட்டங்கள்/சேவைகள் பற்றிய எந்தவொரு விதமான விளம்பரம்/ஆராய்ச்சி/பின்னூட்டம் அடிப்படையிலான செயல்பாடு இதை பொதுப்படையான நுகர்வுக்கு அல்லது வங்கியில் ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர் என்ற முறையில் பின்னூட்டத்தை வழங்க வாடிக்கையாளருக்கு கண்டிப்பாக/தெரிய வைக்க வேண்டும்; தகவல் தொடர்பை அவர்களிடம் பதிவுச் செய்த தொடர்பு முகவரியில்/வங்கியின் வரையறுக்கப்பட்ட செயலாக்கத்தின் படி விவரங்களில் ஏதாவது/அனைத்துக்கும் வாடிக்கையாளர் வழங்கிய வாடிக்கையாளரின் தகவல் தொடர்பு விவரங்களின் பாதுகாப்பு மற்றும் ரகசியத்தன்மையை வங்கி உறுதிச் செய்யும் என அறிந்துக் கொண்டு தகவல் தொடர்பை நிறுத்த வேண்டும் என வாடிக்கையாளர்(கள்) கோரும்/வங்கிக்கு தெரியப்படுத்தும் நேரம் வரையில். வாடிக்கையாளர் ஒரு வெளிநாட்டு வாழ் இந்தியர் (என்ஆர்ஐ)/அந்நிய பிரஜை என்றால் அல்லது அவ்வாறு ஆகிவிட்டால், இந்த சம்மதம் வெளிநாட்டு வாழ் இந்தியர் என்ற அவர்களது தகுதிக்கு உட்பட்டது என்பதை வாடிக்கையாளர் உறுதிச் செய்கிறார் மற்றும் அவ்வாறு செய்வதன் மூலம் வாடிக்கையாளருக்கு பொருந்தக்கூடிய அவர்கள் வசிக்கும் நாட்டின் ஒழுங்குமுறை அல்லது சட்ட விதிகளை எந்தவிதத்திலும் அவர்கள் மீறவில்லை அல்லது மாறாக செயல்படவில்லை.

வாடிக்கையாளரைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கும் உரிமையை வங்கி தன்னிடம் வைத்திருக்கும் இதற்காக வாடிக்கையாளர் குறித்த கூடுதல் விவரங்களைச் சேகரிக்க வங்கியிடமிருக்கும் வாடிக்கையாளரின் கணக்குகள் / நிதியியல் நிலைமையைத் தெரிவித்து அவற்றைப் பெறும்.

ஏடிஎம் பரிவர்த்தனைகள் தொடர்புள்ள விவகாரங்கள்

கார்டுதாரர் ஏடிஎம் பரிவர்த்தனையால் தனது கணக்கில் பணம் தவறுதலாக கழிக்கப்பட்டுள்ளதை அறிந்தால், இந்த பிரச்சனையை உடனடியாக வங்கியில் தெரிவிக்க கார்டுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. வங்கி விசாரணை செய்து மற்றும் தான் கண்டறிந்தது பற்றி கார்டுதாரருக்கு பதிலளிக்கும் இந்த பிரச்சனையில் வங்கியின் முடிவே இறுதியானது மற்றும் கார்டுதாரரை கட்டுப்படுத்துவதாக இருக்கும். பரிவர்த்தனைகள் தொடர்பான எந்தவொரு விவகாரத்தையும், அத்தகைய சர்ச்சைக்குரிய பரிவர்த்தனை தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக வங்கிக்கு தெரிவிக்க வேண்டும்.

ஒருவேளை கார்டுதாரருக்கு ஏடிஎம் இயந்திரத்தில் இருந்து சேதமடைந்த/கிழிந்த/வெட்டுப்பட்ட/போலி ரூபாய் நோட்டு(கள்) வந்தால், கார்டுதாரர் கிளைக்கு சென்று ஒரு கடிதம் மற்றும் ஏடிஎம்மில் பரிவர்த்தனை செய்ததை உறுதிச் செய்யும் பரிவர்த்தனை சீட்டை சமர்ப்பித்து ரூபாய் நோட்டு(களை) மாற்றிக் கொள்ள வேண்டும். வேறு ஏதாவது விதத்தில் க்ளெய்ம் செய்தால் அதை வங்கி ஏற்றுக் கொள்ளாது.

ஏடிஎம்/டெல்லர் கவுன்டர் மூலம் ஒருவேளை கார்டுதாரர் ஒரு போலியான/சேதமடைந்த/கிழிந்த ரூபாய் நோட்டு(களை) டெப்பாசிட் செய்தது கண்டறியப்பட்டால், போலியான/சேதமடைந்த/கிழிந்த ரூபாய் நோட்டு(களின்) மதிப்புக்கு சமமான தொகையை வங்கி அவருக்கு வரவு வைக்காது. கள்ள ரூபாய் நோட்டுகளை கார்டுதாரருக்கும் வங்கி திருப்பிக் கொடுக்காது. எனினும், கார்டுதாரர் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை வைத்தால் சேதமடைந்த/கிழிந்த ரூபாய் நோட்டுகளை வங்கி திருப்பிக் கொடுக்கும். இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது பிறப்பிக்கும் வழிகாட்டுதல்களின்படி அத்தகைய கள்ள/சேதமடைந்த/கிழிந்த ரூபாய் நோட்டுகள் பற்றி அதிகாரிகளுக்கு தெரிவிக்கும் உத்தரவுகள்/வழிகாட்டுதலுக்கு வங்கி இணங்கும்.

விவகாரம் ஏதாவது இருந்தால், ஏடிஎம்-ன் தணிக்கை பதிவேடு (ஒரு அச்சிட்ட/திருத்த முடியாத மின்னணு வடிவத்திலானது) இறுதியானதாக மற்றும் அனைத்து விவகாரங்களிலும் முடிவான ஆதாரமாக வங்கி பயன்படுத்தும். விரிவான தணிக்கை பதிவுகளுக்கு கட்டுப்பட கார்டுதாரர் ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஒருவேளை கார்டுதாரரின் கார்டு இன்னொரு வங்கியின் ஏடிஎம்மில் சிக்கிக் கொண்டால், வங்கிக்கு தகவல் தெரிவிக்க கார்டுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது இதனால் சிக்கிக் கொண்ட கார்டை முடக்கி விட்டு ஒரு புதிய கார்டு வாடிக்கையாளருக்கு கொடுக்கப்படலாம்.

கே) பரிவர்த்தனை தோல்வி/பணம் திரும்ப வருவது

முடிவுறாத/தோல்வியுற்ற பரிவர்த்தனைகளில் பணத்தை திரும்ப பெறும் காலவரம்பு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பு பூர்த்திச் செய்ய தவறுவதால் செலுத்தக்கூடிய அபராதம் பின்வருமாறு இருக்கும்:

வ. எண்	நிகழ்வு பற்றிய விளக்கம்	தானாக திரும்ப வருவதற்கான கட்டமைப்பு மற்றும் இழப்பீடு	
		தானாக திரும்ப வருவதற்கான நேரவரம்பு	செலுத்தக்கூடிய இழப்பீடு
ஆட்டோமேட்டட் டெல்லர் மெஷின் (ஏடிஎம்) உள்பட மைக்ரோ-ஏடிஎம்கள்			
a.	வாடிக்கையாளரின் கணக்கில் பணம் கழிக்கப்பட்டது ஆனால் பணம் இயந்திரத்தில் இருந்து வெளிவரவில்லை.	தோல்வியுற்ற பரிவர்த்தனைக்கு அதிகபட்சமாக டி + 5 வேலை நாட்களுக்குள் பணம் திரும்ப வரவேண்டும்.	டி+5 வேலை நாட்களுக்கு பிறகும் தாமதமானால் நாளொன்றுக்கு ரூ. 100/- கணக்குதாரர் கணக்கில் வரவு வைக்கப்படும்.
கார்டு பரிவர்த்தனை			
a.	பிஓஎஸ்-ல் பாயின்ட் ஆஃப் சேல் (கார்டு இருப்பது) உள்ளிட்டவை கணக்கில் கழிக்கப்பட்டது ஆனால் வணிக நிறுவனத்தில் இருந்து உறுதி செய்யப்படவில்லை அதாவது கட்டணரசீது உருவாக்கப்படவில்லை.	டி+5 வேலை நாட்களுக்கு பணம் தானாக திரும்ப வந்துவிடும்.	டி+5 வேலை நாட்களுக்கு பிறகு தாமதமாகும் நாளொன்றுக்கு ரூ. 100/-.
b.	கார்டு இல்லாதது (சிஎன்பி) (இகாமர்ஸ்) கணக்கில் கழிக்கப்பட்டது ஆனால் உறுதிப்படுத்தல் வணிகரின் கணினிக்கு வரவில்லை.		

அதிக விவரங்களுக்கு மற்றும் மிகச் சமீபத்திய பொருந்தும் கட்டமைப்புக்கு, வங்கியின் இணையதளத்தில் வங்கி இடம்பெறச் செய்துள்ள வாடிக்கையாளர் இழப்பீடு கொள்கையை வாடிக்கையாளர் படித்துப் பார்க்க வேண்டும்.

1) **ஒரு வாடிக்கையாளரின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு**

(ஏ) **ஒரு வாடிக்கையாளருக்கு பூஜ்ய பொறுப்பு**

பின்கூறப்பட்டுள்ள நிகழ்வுகளின்படி அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை நிகழ்ந்தால் பூஜ்ய பொறுப்புக்கு வாடிக்கையாளருக்கு உரித்தாகும்:

i. மோசடி/ வங்கியின் தரப்பில் அலட்சியம்/குளறுபடியால் ஏற்படும் மோசடி (பரிவர்த்தனையை வாடிக்கையாளர் தெரிவித்தாலும் அல்லது தெரிவிக்காவிட்டாலும்).

ii. மூன்றாவது தரப்பு மீறல் இதில் குளறுபடி வங்கியிடமோ அல்லது வாடிக்கையாளரிடமோ இருப்பதில்லை ஆனால் முறைமையில் ஏதோவொரு இடத்தில் நேரிடுகிறது, மற்றும் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை சம்பந்தமாக வங்கியிலிருந்து தகவல் கிடைத்து மூன்று வேலை நாட்களுக்குள் வங்கிக்கு வாடிக்கையாளர் தெரியப்படுத்துகிறார்.

(பி) **ஒரு வாடிக்கையாளரின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு**

பின்கூறப்பட்ட சூழல்களில் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் காரணமாக ஏற்படும் இழப்புக்கு ஒரு வாடிக்கையாளரே பொறுப்பாவார்:

i. ஒரு வாடிக்கையாளரின் கவனக்குறைவு காரணமாக இழப்பு ஏற்படுகிறது அதாவது பணம் செலுத்தும் விவரங்களை அவர்கள் பகிர்ந்துள்ளனர் எனில், அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனையை வங்கிக்கு அவர்கள் தெரிவிக்கும் வரை ஒட்டுமொத்த இழப்பையும் வாடிக்கையாளர் தான் ஏற்க வேண்டும். அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனையை தெரிவித்தப் பிறகு நேரிடும் எந்தவொரு இழப்பையும் வங்கி ஏற்றுக் கொள்ளும்.

ii. அங்கீகரிக்கப்படாத மின்னணு பேங்கிங் பரிவர்த்தனையின் பொறுப்பு வங்கிக்கோ அல்லது வாடிக்கையாளருக்கோ இல்லை, ஆனால் முறைமையில் ஏதோவொரு இடத்தில் நேரிடுகிறது மற்றும் அத்தகைய ஒரு பரிவர்த்தனையை வங்கிக்கு தெரிவிப்பதில் வாடிக்கையாளர் தரப்பில் (வங்கியில் இருந்து தகவல் பெற்றப் பிறகு நான்கு முதல் ஏழு வேலை நாட்களுக்கு) தாமதம் ஏற்படுகிறது, வாடிக்கையாளரின் பரிவர்த்தனை ஒன்றுக்கு பொறுப்பு பரிவர்த்தனை மதிப்புக்கு அல்லது அட்டவணை 1ல் குறிப்பிட்ட தொகைக்கு, இதில் எது குறைவோ அதற்கு உட்பட்டதாக இருக்கும்.

அட்டவணை 1
பத்தி 2 கே) (பி) (டிடி)ன் கீழ் ஒரு வாடிக்கையாளரின் அதிகபட்ச பொறுப்பு

கணக்கு வகை	அதிகபட்ச பொறுப்பு (ரூ.)
• பிஎஸ்பிடி கணக்குகள்	5,000
• இதர அனைத்து வங்கி சேமிப்பு கணக்குகள் • முன் கூட்டி பணம் செலுத்திய இன்ஸ்ட்ரூமென்ட்ஸ் மற்றும் பரிசு கார்டுகள் • எம்எஸ்எம்இ-களின் நடப்பு/ரொக்க கிரெடிட்/ஓவர்டிராஃப்ட் கணக்குகள் • ஆண்டு சராசரி கையிருப்புடன் கூடிய தனிநபர்களின் நடப்பு கணக்குகள்/ரொக்க கிரெடிட்/ஓவர்டிராப்ட் கணக்குகள் (மோசடி நிகழ்வுக்கு முன்புள்ள 365 நாட்களின் போது)/வரம்பு ரூ. 25 லட்சம் வரை • ரூ. 5 லட்சம் வரையில் வரம்புள்ள கிரெடிட் கார்டுகள்	10,000
• இதர அனைத்து நடப்பு/ரொக்க கிரெடிட்/ ஓவர்டிராப்ட் கணக்குகளுக்கு • ரூ. 5 லட்சத்துக்கு அதிக வரம்புள்ள கிரெடிட் கார்டுகளுக்கு.	25,000

மேலும், தகவல் தெரிவிப்பதில் **ஏழு வேலை நாட்களுக்கும்** அதிக தாமதம் ஏற்பட்டிருந்தால், வங்கியின் வாரியம் அங்கீகரித்த கொள்கைப்படி வாடிக்கையாளரின் பொறுப்பு தீர்மானிக்கப்படும்.

(சி) பூஜ்ய பொறுப்பு/வாடிக்கையாளரின் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கு பணம் திரும்ப வரும் நேரவரம்பு

வாடிக்கையாளர் தகவல் தெரியப்படுத்தியதும், அங்கீகரிக்கப்படாத மின்னணு பரிவர்த்தனையில் சம்பந்தப்பட்ட தொகையானது, வாடிக்கையாளர் அந்த தகவலை தெரிவித்த தேதியில் இருந்து 10 வேலை நாட்களுக்குள் வாடிக்கையாளரின் கணக்கில் பணத்தை வங்கி வரவு (ஷேடோ ரிவர்சல்) வைக்கும் (காப்பீடு க்ளெய்ம், ஏதாவதிருந்தால், தீர்வுக்காக காத்திருக்காமல்). மேலும் வாடிக்கையாளர் தரப்பில் அலட்சியத்தால் அங்கீகரிக்கப்படாத மின்னணு பேங்கிங் பரிவர்த்தனைகள் ஏற்பட்டிருந்தாலும் கூட, வாடிக்கையாளருக்கு உள்ள பொறுப்பை விலக்கிக் கொள்ளும் தனியுரிமை முடிவை வங்கி எடுக்க தீர்மானிக்கலாம். கிரெடிட் மதிப்பானது, அவ்வாறு தெரிவிக்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனையின் மதிப்புக்கு இணையானதாக இருக்கலாம்.

3. **விதிகள் மற்றும் நிபந்தனைகளில் திருத்தம்:**

இந்த ஆவணத்தின் எந்த ஒரு விதிகளையும் வங்கி தன் விருப்பத்தின் படி மாற்றி அமைக்க முடியும். எனினும் கட்டணம் அல்லது அதற்கான விதிகளில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட்டால் அது குறித்து 30 நாட்கள் அல்லது அதிகமான கால அவகாச முன்னறிவிப்பு கொடுத்த பிறகே செய்யப்படும். இது போன்ற மாற்றங்கள் குறித்த தகவல் நேரடி தபால்கள், எலக்டிரானிக் மற்றும் அச்சடித்த வாசகங்கள், இ-மெயில்கள் மற்றும் எஸ்எம்எஸ் செய்திகள் உள்ளிட்ட பல வழிமுறைகளில் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படும். இவைகள் போக வங்கியின் இணையதளப் பக்கத்திலும் அவ்வப்போது மாற்றங்கள் செய்தது புதுப்பிக்கப்படும்.

ஒருவேளை 30 நாட்கள் அறிவிப்புக்கு பிறகு வாடிக்கையாளர் தன் சம்மதத்தைத் அந்த அறிவிப்பு காலவரம்புக்குள் திரும்பப் பெறவில்லை என்றால், கார்டுதாரர் இந்த விதிகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்று கருதப்படும்.

4. கட்டுப்படுத்தும் சட்ட விதிகள் மற்றும் சட்ட அதிகார வரம்பு

இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது வங்கியில் பராமரிக்கப்படும் கணக்குகளின் இயக்கம் அல்லது வங்கி வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகள் அனைத்தையும் இந்திய குடியரசின் சட்டதிட்டங்கள் மட்டுமே கட்டுப்படுத்தும். மும்பை நீதிமன்ற எல்லைகளுக்கு உட்பட்டிருக்கும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களில் பிரச்சனைகள் / கிளெய்ம்கள் / சச்சரவுகளை முறையிட்டு தீர்த்துக்கொள்ளலாம். வாடிக்கையாளருக்கு எதிரான வழங்குகளை எந்த ஒரு நீதிமன்றங்களிலும் / தீர்ப்பாயங்களிலும் / அதிகாரங்களிடமும் வங்கி முறையிட்டு கொண்டு வரலாம் என்ற உரிமையை வங்கி பெற்றிருக்கும் அதற்கு வாடிக்கையாளர் சம்மதம் அளிக்கிறார்.

இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதாவது ஒரு பகுதி சட்டப்படி நிலைநிறுத்த இயலாது / செல்லுபடியாகாது / தடைசெய்யப்பட்டுள்ளது எனும்போது, சட்டரீதியாக செல்லுபடியாகாத அந்த பகுதி மட்டுமே பாதிப்படையுமே அல்லாது வரையறைகள் மற்றும் நிபந்தனைகளில் மீதமுள்ள பகுதிகள் அதனால் பாதிப்படையாது.